## தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600006.

ந.க.எண்.033151/கே/இ3/2018 நாள் 29.04.2019

பொருள் கணினிமயமாக்கம்– வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வேலைவாய்ப்பு பிரிவு – 12ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்கள் – அவர்கள் கல்வி பயின்ற பள்ளிகள் மூலமாக நேரடியாக வேலைவாய்ப்புத் துறையின் – இணையதளத்தில் தங்கள் கல்வித் தகுதிகளை பதிவு செய்தல் சார்ந்து – சில விவரம் தெரிவித்தல் – சார்பு.

பார்வை சென்னை – 32, வேலைவாய்ப்பு மற்றும் பயிச்சித்துறை இயக்குநரின் கடித எண்.கணினி/11271/2016 நாள் 29.04.2016.

*************

பார்வையில் கண்ட வேலலைவாய்ப்பு மற்றும் பயிச்சித்துறை இயக்குநரின் கடிதத்தில் 2011 ஆம் ஆண்டு முதல் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ/மாணவியர்கள் தங்கள் கல்வித் தகுதிகளை தாங்கள் பயின்ற பள்ளிகளின் மூலமாக நேரடியாக இத்துறையின் இணையதளத்தில் பதிவுசெய்து அடையாள அட்டை (X–10) பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதுபோன்று 2012, 2013, 2014, 2015, 2016 மற்றும் 2017ஆம் ஆண்டு வரை மாணவ/மாணவியர்களின் நலனை கருத்தில் கொண்டு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தங்கள் கல்வித் தகுதிகளை தாங்கள் பயின்ற பள்ளிகளின் மூலமாக பதிவுகள் செய்யப்பட்டன.

இதனால் பதிவுதாரர்கள் இச்சேவையை பயன்படுத்தி தாங்கள் கல்வி பயின்ற பள்ளிகள் மூலமாகவே பதிவு செய்துகொண்ட காரணத்தினால், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஏற்படும் கூட்டநெரிசலை பெருவாரியாக தவிர்க்கப்பட்டது. எனவே, கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் அந்தந்த பள்ளிகளிலேயே பதிவு மேற்கொள்ளப்படுகிறது. பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியானபின் நிரந்தர சான்றிதழ் வழங்கும் நாளிலிருந்து 15 நாட்களுக்கு அந்த பள்ளிகளிலேயே பதிவு செய்து கொள்ளவும், அந்தந்த தேர்வர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ் வெளியிடப்பட்ட நாளே பதிவு மூப்பு நாளாக வழங்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி 2019ஆம் ஆண்டு மார்ச்/ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற 10ம் மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள்

வெளிவந்த பிறகு மாணவ/மாணவியர்களை அவர்கள் பயின்ற பள்ளியிலேயே இணையதள மூலம் பதிவு செய்வதற்கு ஏதுவாக சென்ற ஆண்டு (2018) வழங்கிய அதே படிவங்களை இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. இப்படிவங்களை பூர்த்தி செய்து தயார் நிலையில் வைத்திருக்க தலைமையாசிரியர்களுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :–**
படிவம் – I & II

**பள்ளிக்கல்வி இயக்குநர்**

**பெறுநர்**
அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்.

**நகல்:**
இயக்குநர்,
மெட்ரிக் பள்ளிகள்
கல்லூரிச் சாலை
சென்னை – 600 006. அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காகவும், மெட்ரிக் பள்ளிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்குவதற்கும் கனிவுடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

**நகல்:**
இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
ஆலந்தூர் சாலை, கிண்டி,
சென்னை – 600 032.
} தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.

# படிவம் – I

(ஏற்கனவே 10 ஆம் வகுப்புமுடித்து, மதிப்பெண் சான்றுகளைவேலைவாய்ப்பகத்தில்பதிவுசெய்த 12ஆம் வகுப்புமாணவ/மாணவியர்கள்கீழ்க்கண்டவிவரங்களைதயார் நிலையில்வைத்துக் கொள்ளவேண்டும்)

1. **Name of the School** :
2. **Student Exam. Register No.** :
3. **Student Name** :
4. **Address** :
5. **Employment Registration No.** :

# படிவம் – II

(மேலும் முதல்முறையாகவேலைவாய்ப்பகத்தில்பதிவுமேற்கொள்ளும் 10ஆம் வகுப்புமற்றும் 12ஆம் வகுப்புமாணவ/மாணவியர்கள்கீழ்க்கண்டபடிவத்தில்தங்களதுவிவரங்களைதயார் நிலையில்வைத்துக் கொள்ளவேண்டும் )

1. Name of the School :
2. Student Exam. Register No. :
3. Student Name :
4. Date of Birth :
5. Gender :
6. Father's Name :
7. Mother's Name :
8. Address :

9. Name of the District :
10. Ration Card No. :
11. Aadhar Card No. :
12. Mobile No. :
13. E-Mail ID :
14. Religion : Hindu/Christian/Muslim
15. Caste Name :
16. Community Certificate No. :
17. Are you pursuing Higher Education : Yes / No

If Yes

| | |
|---|---|
| | Professional Course |
| | Arts & Science Group |
| | Vocational Course |
| | Other Short term skills |

If No

| | |
|---|---|
| | Self – Employment |
| | Other Employment |